மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 146, திரு. சி. கோபு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

146—

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

***4861—திரு. சி. கோபு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டுத் தொகுதி, சின்னக்கோவித்தம்பாடி கிராமத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. கோபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னக்கோவித்தம்பாடி, பள்ளிகொண்டான் பேரூராட்சியிலே இருக்கின்ற ஒரு கிராமம் ஆகும். இந்தக் கிராமத்திலே தற்போது விசைப்பம்பு மூலமாக நேரடியாகத் தண்ணீர் விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலாவது இங்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, அதன் மூலமாகத் தண்ணீர் விநியோகம் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னக்கோவித்தம்பாடி என்பது பள்ளிகொண்டான் பேரூராட்சியில் ஒரு பகுதி. பள்ளிகொண்டானிலிருந்து ஏறத்தாழ 3.5 கிலோமீட்டர் தூரத்தில் அது இருக்கிறது. தற்போது, அந்தக் குடிநீர் திட்டத்தைப் பயன்படுத்துகிற பகுதியில் ஆயிரம் பேர் வசிக்கிறார்கள். பக்கத்தில் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பொதுக் கிணறு

1999 மார்ச் 23]

அமைத்து, நேரடியாகத் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. ஆனால், நாம் நிர்ணயித்த அளவிற்கு தண்ணீர் கொடுக்க முடியாமல் இருப்பது உண்மை. ஆனாலும், அதற்கென அதிகமாகச் செலவழிப்பதற்கு அஞ்சி, அதற்கு சற்றுக் குறைவாக ஏதாவது தொகை செலவழித்துச் செய்யலாமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறேன். அதற்கான ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முடிந்த பிறகு நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 147, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

147—

திருநகர் பகுதியைப் பொழிச்சலூருடன் சேர்த்தல்

***14742—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்டம், அனகாபுத்தூர் பேரூராட்சி எல்லையில் உள்ள திருநகர் பகுதியைப் பொழிச்சலூர் கிராமத்தோடு சேர்த்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநகர் பகுதி, அனகாபுத்தூர் பேரூராட்சி எல்லையில் இருந்தாலும், அனகாபுத்தூரிலிருந்து இங்கு வருவதற்கு வழியே கிடையாது. பம்மல் எல்லை வழியாக, பொழிச்சலூர் எல்லை வழியாக வந்து போக வேண்டிய நிலை இருக்கிறது. அங்கே இருக்கிற மக்களுக்குக் குடிதண்ணீர்கூட பொழிச்சலூர் எல்லையிலே ஒரு மூலையிலே குழாய் அமைத்து அதிலேயிருந்துதான் தண்ணீர் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, எந்தத் தொடர்பும் இல்லாத இந்த இடத்தை, பொழிச்சலூர்